கிளிநொச்சி மாவட்ட நிறுவனங்களுடனான ஊடாட்டம்

# மகுடம்

மாத இதழ் 2022

வரலாறு
அறிமுகம்
பணிகள்
பணியாளர்கள்
பயனாளிகளின் பின்னூட்டல்



## WOMEN LIFE & RIGHTS ASSOCIATION - WLRA

அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம்
கிளிநொச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"Let's Protect Feminism with Dignity"

# பெண்கள் வாழ்வுரிமைச் சங்கம்

# කාන්තා ජීවිත හා අයිතිවාසිකම් සංගමය

# Women Life and Rights Association

Email: womenlifeandrightsassociation@gmail.com



மகுடம்

கிளிநொச்சி மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளடக்கம்


- முன்னுரை
- வாழ்த்துச்செய்தி
- அறிமுகம்
- வரலாறு
- நிர்வாக கட்டமைப்பு
- பணியாளர்கள்
- பணிகள்
- பயனாளிகளின் அறிமுகமும் பின்னூட்டலும்
- நன்றியுரை


மகுடம்
கிளிநொச்சி மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

கிளிநொச்சி மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தினூடாக முன்னெடுத்து செயற்படுத்தப்படும் **"மகுடம்"** இதழ் வெளியீடானது ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு நிறுவனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி வெளியிட இருப்பது ஒரு சிறந்த செயற்பாடாகும். இச் செயற்பாடு தொடர்ந்து வரும் மாதாங்கள் தோறும் ஏனைய நிறுவனங்களின் ஊடாட்டத்தினூடாக வெளிவர இருக்கிறது. அவ்வகையில் இம்மாதம் **"மாதமொரு மகுடம்"** இதழ் வெளியீட்டிற்காக **"பெண்கள் வாழ்வுரிமைச் சங்கம"** தெரிவு செய்யப்பட்டுள்ளது.

பெண்கள் வாழ்வுரிமைச் சங்கம் நிறுவனமானது பெண்களை மையப்படுத்தி அவர்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தல், தொழில் ரீதியாகவும் தேவைகள் அடிப்படையிலும் குழுக்கள் உருவாக்குதல், மக்களின் உரிமைகள் சார்ந்த பிரச்சினைகளை வெளிக்கொணரல், தீர்வுக்கு வழிவகுத்தல், கல்வி சமூக பொருளாதார துறைகளின் அபிவிருத்தி தளங்களில் பெண்களை ஈடுபடவைத்தல், அவர்களின் ஆளுமையை விருத்தி செய்தல், பால் நிலை சமத்தும் மற்றும் மனித உரிமைகள், பெண்களுக்கான விசேட உரிமைகள் தொடர்பான அறிவூட்டலை சகல தரப்பினரிடமும் ஏற்படுத்தல், ஆளுமையை வளர்த்தல் போன்ற செயற்பாடுகள் பெண்கள் வாழ்வுரிமைச் சங்கம் நிறுவனத்தினது பிரதான நோக்கமாகும்.

தற்துணிவோடு இயங்கும்' நிறுவனங்கள் தொடர்ந்து தமது செயற்பாடுகளை வெளிக்கொண்டு வருவதற்கு மாதமொரு மகுடம் இதழ் வெளியீட்டனை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும்.

என்றும் சேவையில்,

அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம்,

கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துச் செய்தி

**'உங்கள் உயர்வின் மேன்மையை கண்டு தலைவணங்கி வாழ்த்துகின்றேன்'**

திசைகள் இருண்டு கிடந்த காலத்தில் மானுடர் வாழ்விற்கான தேடலை காணாது கண்விழித்து நின்ற போது, அந்த விழிகளின் ஓரத்தில் வடிந்த துளிநீர் பட்டுத்தெறித்து **மண்ணில் முளைத்த பெரும் விருட்சமே எங்கள் வாழ்வுரிமைச் சங்கம்.**

'வாழ்விற்கான உரிமை இயல்பானது ஆனால் இங்கோ அது தேடி அலைந்து திரிந்து சில நேரங்களில் வாழ்வையும் அதற்காக இழந்து விட்டதுமுண்டு. இது நமது வரலாறு. ஆனால் வாழ்வுரிமைச் சங்கம் முளைத்து நிழலும், காயும், கனியும் தந்து எங்கள் வாழ்விற்கு அடைக்கலமான கூடுகளை அதன் கிளைகளில் கட்டிய போதுதான் வானம் வரைக்கும் பறக்கும் சிறகுகள் எங்களுக்கு முளைத்தது.'

இது பெண்கள் வாழ்வுரிமைச் சங்கத்தில் உணர்வுரிமையோடு வளமும் பலமும் பெறும் பெண்ணும் தனக்குதானே எழுதி வைத்துக்கொள்ளும் வாழ்வுரிமைச் சாசனம்.

உண்மை தான் நான் கடந்து வந்த பாதையில் நின்று நிமிர்ந்து பார்த்து ஆஆ...... இதுவல்லவோ கோபுரம், இங்கல்லவோ ஒளிச்சுடர்கள் உச்சியிலிருந்து இருண்டு கிடந்த மண்ணை ஒளிர்விக்கின்றன என்று கண்குணர்ந்த போது அங்கேயே நின்று இந்த அமைப்பின் வேர்களையும் அதன் அடிமரத்தையும் அளந்து பார்த்ததுமுண்டு நிற்க......

பெண்களின் வாழ்வுரிமைச் சங்கத்தின் உறுதியான அமைப்பு முறையும், அதன் நிர்வாகிகள், பணியாளர்கள் இணைந்து வாழ்வு தேடும் பெண்களுக்கான வழியாகி நின்று அவர்களின் விடியலுக்கான பாதைகளாக மாறி அந்த பெண்களின் விழி நீர் துடைக்கும் பணி மேன்மையானது.....

மகுடம்

கிளிநொச்சி மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டத்தில் சகல பிரதேசங்களிலும், கிராமங்கிளிலும் வாழ்வுரிமைச் சங்கத்தின் விழுதுகள் தாண்டிச் செல்ல நினைப்போருக்கான ஆதார கயிறாக நின்று உழைக்கும் பெண்களுக்கான உறுதியான வளமாக நிற்கிறது.

இலங்கையில் சமகால பொருளாதார நெருக்கடி நிலையில் பெண் தலைமைத்துவம் கொண்ட பல்லாயிரப் பெண்கள் வாழும் எமது மாவட்டத்தில், அந்த குடும்பங்கள் ஏதோ ஒரு வகையில் நிலைத்தும், தளைத்தும் நிற்பதற்கான வேர்களாக பெண்கள் வாழ்வுரிமைச் சங்கம் நிலைத்து நிற்கின்றது.

பெண்களே பெண்களுக்கான வலுவூட்டும் பண்பாட்டின் ஒரு குறியீட்டு வடிவமாக பெண்கள் வாழ்வுரிமைச் சங்கம் கிளிநொச்சி மண்ணில் ஏற்படுத்தும் ஓர் பண்பாட்டு வாழ்வியல் முறைமையால் புதிய வாழ்வுரிமைப்பாதை ஒன்று திறந்திருக்கின்றது.

அந்த பாதையில் ஒரு புதிய பயணத்தை ஆயிரமாயிரம் பெண்கள் அணிவகுத்து செல்ல தங்கள் உழைப்பையும் அர்ப்பணிப்பையும் வழங்கி வரும் இந்த நிறுவனத்தின் மாவட்ட நிர்வாக இயக்குனரான செல்வி. வாசுகி வல்லிபுரம் அவர்களையும், அவரது குழுவினையும் கிளிநொச்சி மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்கிளின் இணையம் வாழ்த்துகின்றது. உங்கள் வாழ்வின் வெளிச்சத்தில் மானுட சமூகம் உரிமை உணர்வோடும், தங்களின் சுய கௌரவத்தோடும் வாழும் நிலைக்கு நீங்கள் இட்ட அடித்தளத்தில் நின்று உங்கள் உயரத்தின் மேன்மையை ஏறிட்டு பார்த்து கரம் கூப்பி தலை வணங்குகின்றேன்......

வாழ்க வளமுடன்.....

வண. T.S. யோசுவா,

தலைவர் - அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம்.
கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிமுகம்

கடந்த காலங்களில் வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் (NECC) மூலம் கிளிநொச்சி மாவட்டதில் இனங்காணப்பட்ட பெண்கள் மற்றும் அடிநிலை மக்களின் சமூகப்பிரச்சினைகள்,கல்வி ,சுகாதாரம் மற்றும் உரிமைசார் பிரச்சினைகளை இனங்கண்டு குரலற்றவர்களின் குரலாக ஒலிப்பதற்கும் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்திற்கும் இம்மக்களின் பிரச்சினைகளை கொண்டு செல்வதற்கான ஒரு பாதையாக வகுத்து 2018ம் ஆண்டு இதன் முன்னைநாள் இணைப்பாளரான செல்வி. விஜுசியா கமலேஸ்வரன் அவர்களின் தலைமைத்துவத்தின் கீழ் **"நிலைபேறான ஆளுமை அபிவிருத்தி மற்றும் சம உரிமைகள் கொண்ட சமூகம்"** எனும் நீண்ட கால இலக்குடன் "சிவில் உரிமைகள் மன்றம்" மற்றும் "பெண்கள் வாழ்வுரிமைச் சங்கம்" தோற்றம் பெற்றது.

2019ம் ஆண்டு ஜனவரி 01ம் திகதியன்று செல்வி வாசுகி வல்லிபுரம் அவர்கள் அமைப்பின் இணைப்பாளராக பணியை பொறுப்பேற்று நிறுவனத்தின் தலைமையை ஏற்றுக்கொண்டார். இதன் போது 08 பெண் பணியாளர்கள் தமது கடமைகளையும் பொறுப்புக்களையும் ஏற்றுக் கொண்டு மாவட்டத்தில் தமது பணிக்களை ஆரம்பித்தனர். இதன் பின்னர் **"பெண்கள் வாழ்வுரிமைச்சங்கம்"** கம்பனிச் சட்டத்தின் கீழ் சட்டரீதியாக பதிவு செய்யப்பட்டு பின்வரும் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு மிகச் சிறப்பாக பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் பணியாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

- 04 பிரதேசங்களிலுமுள்ள கிராமங்களில் கிராம மட்ட பெண்கள் குழுக்கள் அமைத்தலும் அவர்களை வலுப்படுத்தலும்.
- தொழில் ரீதியாகவும் தேவைகள் அடிப்படையிலும் குழுக்கள் உருவாக்கியமை (உ-ம்: மீனவர், விவசாயம், இளைஞர் யுவதிகள், சிறுவர்)
- 04 பிரதேச மட்ட வலையமைப்பை உருவாக்கி வலுப்படுத்தல்.
- கிளிசொச்சி மாவட்ட மட்ட வலையமைப்பை உருவாக்கி அமைத்து மத்திய குழுவை உருவாக்கலும்.
- மக்களின் உரிமைகள் சார்ந்த பிரச்சினைகளை வெளிக்கொணரலும் தீர்வுக்கு வழிவகுத்தலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மனித உரிமைச் செயற்ப்பாட்டாளர்களை உருவாக்கலும் பயிற்சிகள் வழங்கலும்.

- கல்வி சமூக பொருளாதார துறைகளின் அபிவிருத்தி தளங்களில் பெண்களை ஈடுபடவைத்தலும் அவர்களின் ஆளுமையை விருத்தி செய்தலும்

- பால்நிலை சமத்தும் மற்றும் மனித உரிமைகள், பெண்களுக்கான விசேட உரிமைகள் தொடர்பான அறிவூட்டலை சகல தரப்பினரிடமும் ஏற்படுத்தலும் ஆளுமையை வளர்த்தலும்.

- அவசர பேரிடர் கால மனிதநேயப் பணிகள்

- உளவள ஆற்றுப்படுத்தல்கள், இலவச சட்ட உதவிகள்

- உரிமைசார் பிரச்சினைகளுக்கான தேசிய மற்றும் சர்வதேச பரிந்துரைகளை மேற்கொள்ளல்.

- விழிப்புணர்வுச் செயற்பாடுகள்


- பெண்களை அரசியலில் ஈடுபட வைத்தலும் பெண்ணுரிமைக்காக குரல் கொடுத்தலும்

மகுடம்
கிளிநொச்சி மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிறுவன கட்டமைப்பு

1. கிராம மட்ட பெண்கள் சிறுகுழுக்கள்
2. பிரதேச வலையமைப்பு
3. மாவட்ட வலையமைப்பு
4. மத்திய குழு




மகுடம்

கிளிநொச்சி மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரலாறு

கிளிநொச்சி மாவட்டம் இலங்கையின் வடக்கு மாகாணத்தில் அமைந்துள்ள ஒரு நிர்வாக மாவட்டமாகும். மாவட்டம் முறையே கரைச்சி, கண்டாவளை, பூநகரி மற்றும் பச்சிலைப்பள்ளி என நான்கு நிர்வாகப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி. 30 வருட கால யுத்தத்தின் போது இப்பகுதி மக்கள் பல இடப்பெயர்வுகளை அனுபவித்ததோடு சில குடும்பங்கள் தென்னிந்தியாவில் தஞ்சம் புகுந்தனர். பொதுமக்கள் அனைவரும் மானிக் பண்ணை முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். கிளிநொச்சி மக்களும் ஏறக்குறைய ஒரு வருட காலம் முகாமில் தங்க வைக்கப்பட்டு 2010 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இருந்து படிப்படியாக மீள்குடியேற்றப்பட்டனர். கிளிநொச்சி மாவட்டத்தில் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் மற்றும் பெண்களுக்கெதிரான வன்முறைகள், வாழ்வாதாரம், அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் உரிமைசார் செயற்திட்டங்களை மேம்படுத்தல் போன்ற நோக்கில் பாதிக்கப்பட்ட அடிநிலை மற்றும் அறிவுசார் அனுபவம் மற்றும் ஆற்றல் மிக்க மக்களைக் கொண்டு இவ் அமைப்பு உருவாக்கப்பட்டு செயற்பட்டு வருகின்றது. தேவைகளைக் கருத்தில் கொண்டும் இனங்காணப்பட்டதற்கும் அமைவாக முல்லைத்தீவு மாவட்டத்திற்கும் அமைப்பு விரிவாக்கம் பெற கடந்த காலங்களில் ஆலோசிக்கப்பட்டது. அதனடிப்படையில் அமைப்பு விஸ்தரிக்கப்பட்டு தனது மேலான பணியை அங்கும் செயற்படுத்தியது. முல்லைத்தீவு மாவட்ட மக்களும் பெரிதும் பயனடைந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிர்வாக கட்டமைப்பு

இணைப்பாளர்

செல்வி. வாசுகி வல்லிபுரம்

உதவி இணைப்பாளர்

திருமதி. கமலினி விஜயரூபன்

கணக்காளர்/நிர்வாக உத்தியோகத்தர்

செல்வி. ஜனனி சுப்ரமணியம்

திட்ட உத்தியோகத்தர்

திருமதி. கோகிலாதேவி தவகுமார்

களப்பணியாளர்கள்

திருமதி. ஜெயக்குமார் ரஞ்சிதஸ்ரீ

திருமதி. பீரதீபன் சசிகலா

சிறுகுழுக்கள்

தொண்டர்கள்

காரிகைகுழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எமது வேலைத்திட்டங்களை பின்வரும் கட்டமைபின் அடிப்படையில் நாம் மேற்கொண்டு வருகின்றோம்**

கிளிநொச்சி மாவட்டதில் உள்ள நான்கு பிரதேச செயலக பிரிவுக்கும் உட்பட்ட கிராம மக்களுடன் எமது வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதன் அடிப்படையில்


**சிறுகுழுக்கள்**


- கரைச்சி - 32
- கண்டாவளை - 15
- பூநகரி - 15
- பச்சிலைப்பள்ளி - 15
- **"காரிகை குழு"** இரண்டாம் தலைமைத்துவம் - 20

அமைக்கப்பட்டு அவர்களுடைய தேவை அறிந்து நாம் இன்று மாவட்ட ரீதியான வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம்.

## 2018ம் ஆண்டில் நடைபெற்ற நிகழ்வுகள் தொடர்பான தகவல்கள்

**தலைமைத்துவப்பயிற்சி- கிளிநொச்சி**





**பால்நிலை சமத்துவம் பயிற்சி**







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## 2019ம் ஆண்டில் நடைபெற்ற நிகழ்வுகள் சில....


வெள்ள நிவாரணம்





காணி தொடர்பான பரிந்துரைச் செயற்பாடு





காயப்பட்டவர் தொடர்பான தகவல் மனித உரிமை ஆணைக்குழுக்கு சமர்ப்பித்தல்





கிளிநொச்சி மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை மாணவர்களுக்கான சுகாதாரப் பொதி வழங்கல்





பிரதேசமட்ட கலந்துரையாடல்





மத்திய குழு கலந்துரையாடல்






மருடம்
கிளிநொச்சி மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மனித உரிமை செயற்பாட்டாளர்களை உருவாக்கல் பயிற்சி நெறி






## 2020ம் ஆண்டில் நடைபெற்ற நிகழ்வுகள் சில....

கோவிட் நிவாரணம்


கொவிட் விளிப்புணர்வு செயற்திட்டம்




நிறுவனங்களின் இணையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரக்கன்று வழங்கல்





பல்கலைக்கழக மாணவர் கௌரவிப்பு






மகுடம்
கிளிநொச்சி மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2021ம் நடைபெற்ற நடைபெற்ற நிகழ்வுகள் சில......

## சர்வதேச மகளீர் தினம்

## சுகாதார விளிப்புணர்வு

## குடும்ப வன்முறை தாபரிப்பு தொடர்பான பரிந்துரை செயற்பாடு




மகுடம்

கிளிநொச்சி மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஊடக சந்திப்பு








## 2022ம் ஆண்டில் நடைபெற்ற நிகழ்வுகள் சில.....

பாடசாலை மாணவர்களுக்கான சுகாதார பொதி வழங்கல்







விதை தானியம் வழங்கல்








மகுடம்

கிளிநொச்சி மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொவிட் பாதிக்கப்பட்ட கர்ப்பவதிளுக்கான பொருட்கள் வழங்கல்







கிராம கள ஆய்வு முசுரன்பிட்டி மற்றும் சாந்தபுரம்





பாடசாலை பால்நிலை சமத்துவம் தொடர்பான பயிற்சி






மகுடம்
கிளிநொச்சி மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரச்சனைப் பகுப்பாய்வும் மக்கள் சந்திப்பும்





சிறுகுழு கலந்துரையாடல்




ஊடகவியலாளர் நேர்முகதேர்வு.






மகுடம்


கிளிநொச்சி மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆற்றுப்படுத்தல்







## நிவாரணம் வழங்கல்







## சிறுவர் பெண்களுக்கு எதிரான வன்முறையை தடுப்பதற்கான கவனயீர்ப்பு











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## 100 நாள் செயல் முனைவு







## சுகாதார விளிப்புணர்வு செயற்பாடு







## NECC சந்திப்பு



மகுடம்

கிளிநொச்சி மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணைப்பாளர் அவர்களின் கருத்துப் பகிர்வு

கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை மாவட்டத்தை பிறப்பிடமாகக் கொண்ட நான் கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் சிறுவர் பெண்கள் இளைஞர்கள் சார்பில் பணியாற்றி வந்தேன். கடந்த 2019.01.01 கிளிநொச்சி மாவட்டத்தின் CRF/WLRA அமைப்பின் மாவட்ட பொறுப்புடைய இணைப்பாளராக பதவியேற்று வடமாகாணத்தின் கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளராக பதவியேற்று பணியாற்றி வருகின்றேன். வடமாகாணத்தில் கடந்த 5 வருடமாக சிறப்பாக செயற்பட்டு வருவதுடன் ஏனைய அமைப்புக்களுடனும் இணைந்து செயற்பட்டு வருகின்றேன்.

குறிப்பாக 2019 கிளிநொச்சி மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் பிரதி செயலாரகவும் 2020 - 2021 காலப்பகுதிகளில் பிரதித் தலைவராகவும் 2022ம் ஆண்டு கௌரவ செயலாளராகவும் செயற்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் மாகாண உறுப்பினராகவும் சோதனைக் களத்தில் சாதனைப் பெண்ணாக செயற்பட்டு வருகின்றேன் என்பதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

குறிப்பாக எமது அமைப்பின் மாவட்ட ரீதியாக பாதிக்கப்பட்ட மக்களுக்கான சேவைகளை வழங்கிவருவதன் மூலம் மாவட்டத்திலுள்ள பல கிராம மக்கள், பெண்கள் சிறுவர்கள் என பலரும் கல்வி, சுகாதாரம்,வாழ்வாதாரம் , மற்றும் தமது உரிமை ரீதியான பிரச்சினைகளுக்கு தீர்வுகளைப் பெற்றுக்கொண்டுள்ளனர்.

சமகால கோவிட் -19 நெருக்கடியான நிலையிலும் மற்றும் சமகால பொருளாதார நெருக்கடி நிலையிலும் பொருளாதார நிலையில் பின்னடைவினை தளர்த்தி முன்னோக்கி செல்தற்கான இயற்கை விவசாயம் மற்றும் மேட்டுநிலப் பயிர்செய்கைகள், பல வாழ்வாதார முன்னெடுப்புக்கள் மூலம் பெண்கள் பொருளாதாரத்தில் வலுவூட்டப்பட்டனர்.

பெண்கள் மற்றும் பெண்பிள்ளைகள் தலைமைத்துவம் மற்றும் ஆளுமைமிக்கவர்களாக திகழ்வதற்கான பல கருத்தரங்குகள் பயிற்றிப்பட்டறைகள் வழங்கப்பட்டு இன்று கிராமங்களிலும் மாவட்டத்திலும் குழுக்களாகவும் தனி நபர்களாகவும் தற்துணிவோடு செயற்பட்டு வருகின்றனர். நீடித்த நிலைபேறான அபிவிருத்தியை நோக்கிய பயணத்தில் பெண்கள் வாழ்வுரிமைச்சங்கத்தின் கிளை நதிகளாக செயற்பட்டுவரும் பணியாளர்கள் மற்றும் சிறுகுழுக்கள் தொடர்பில் பெருமிதம் அடைகின்றேன்.

**"கண்ணியத்தோடு பெண்ணியம் காப்போம்"**

பணியிலுள்ள,

இணைப்பாளர்,

வாசுகி வல்லிபுரம்.

நன்றி

<u>கருத்துப்பகிர்வு</u>

மகுடம்
கிளிநொச்சி மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்கள் வாழ்வுரிமைச் சங்கத்தின் பூநகரி பிரதேச செயற்பாட்டளாகிய சிவசக்திவேல் இராசசுலோசனா ஆகிய எனது கருத்துக்கள் பெண்கள் வாழ்வுரிமைச்சங்கம் என்கின்ற போதே எமது ஒவ்வொருவரும் மனங்களிலும் பெண்கள் தொடர்புடைய அனைத்து தீரவுகளையும் பெற்றுக் கொள்ள முடியும் என்கின்ற உணர்வு ஏற்படுகிறது. அந்த வகையில் எனக்கும் அவ் உணர்வே ஏற்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது

பெண்கள் வாழ்வுரிமைச் சங்கம் முதலில் எனக்கு அறிமுகமானது நான் மாற்றுத்திறனாளி என்பதை இனங்கண்டு எனது குடும்பத்திற்கு 2018 ஆம் ஆண்டு ஐந்தாயிரம் ரூபாய் பெறுமதியான உலர் உணவுப்பொதி கிடைக்கச் செய்தமையே. இதன்போது இந்நிறுவனத்தின் மீது ஒரு விதமான நம்பிக்கை ஏற்பட்டது. காரணம் கடமைக்கு செய்வது என்பதற்கு அப்பால் தேவையை உணர்ந்து செயல்படுவதே பெருமதியாக காணப்பட்டது. இவ் நிறுவனத்தின் பணியாளர் ஒருவரினால் எமது கிராமத்தில் **"வைகறை"** என்னும் குழு ஆரம்பிக்கப்பட்டது. தொடர்ந்து எனது பிரதேசமாகிய பூநகரியில் 16 குழுக்கள் தெரிவு செய்யப்பட்டு சமூக மாற்றத்திற்காக செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. பெண்கள் வாழ்வுரிமைச் சங்கத்தில் கிராமப்பெண்கள் சிறுவர்கள் மற்றும் நலிவுற்றவர்களின் தேவை அறிந்து விழிப்புணர்வுகளை பெற்றுக் கொள்ளும் வகையில் செயற்பட்டுக் கொண்டிருக்கிறது என்பது இன்றியமையாத ஒன்றாகும். அந்த வகையில் பாதிக்கப்பட்ட மக்களின் உரிமை சார்ந்த பிரச்சினைகளுடன் உள்ள மக்களை சந்தித்து அவர்களுடன் செயற்பட்டு வருகின்றது. எனவே எனது கிராமத்திலும் பெண்களின் உரிமைகள் மறுக்கப்படும் போது நான் இந்நிறுவனத்துடன் தொடர்புபடுத்தி அவர்களுக்கான தீர்வுகளை பெற்றுக்கொடுத்துள்ளேன்.

அதனைப் போல நமது மாவட்டத்திலே மறுக்கப்பட்ட நினைவு தினங்களை கிராம மட்டத்திலேயே மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி நினைவு நாட்கள் நினைவு கூறப்படுகின்றன. சிறுவர் பெண்களுக்கு எதிராக நடைபெறும் துஸ்பிரயோகளுக்கு எதிராக கிராமங்களில் மாற்றங்கள் ஏற்பட வேண்டும் என்பதற்காக விழிப்புணர்வு செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் பூநகரி பிரதேசம் தெளிகரை கிராமத்தின் செயற்பாட்டளர் ஆகிய நான் இந்நிறுவனத்தின் செயற்பாடுகளை பெரிதும் மதிப்பதுடன் அனைத்து செயற்பாடுகளுக்கும் பூரண ஒத்துழைப்பு வழங்கி எமது பிரதேசத்தின் பெண்கள் சிறுவர்களுக்கு மறுக்கப்படும் உரிமைகளை பெற்றுக் கொடுப்பேன் என்பதை தெரிவித்துக் கொண்டு இந்நிறுவனத்துக்கு வாழ்த்துக்களை கூறிக் கொள்கிறேன்

சிவசக்திவேல் இராசசுலோசனா
குழுத்தலைவி

தெளிகரை

பூநகரி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்கள் வாழ்வுரிமைச் சங்கத்தின் கண்டாவளை பிரதேசத்தின் தருமபுரம் மேற்குப் பகுதியில் உறுப்பினராக செயற்பட்டு வருகின்றேன். எனது பார்வையில் இச் சங்கமானது அடி நிலைப்பட்ட பாமர மக்களை ஒன்றிணைத்து பெண்கள் குழுக்களை அமைத்து உரிமைச் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது.

குறிப்பாக பெண்கள் உரிமைகள் , துஸ்பிரயோகங்கள் , காணாமல் ஆக்கப்பட்ட குடும்பங்களுக்கான உதவித்திட்டங்கள் , ஆவணங்களைப் பெற்றுக்கொள்ள வழிவகைகள் செய்தல் போன்ற சேவைகளை செய்து வருகின்றது. தேவையில் இருப்பவர்களை இனங்கண்டு தெரியப்படுத்துமிடத்து சரியான முறையில் பிரச்சினைகளை இனங்கண்டு பரிந்துரைகளை வழங்கி உள்ளார்கள்.

இச் சங்கமானது பெண்களை ஊக்குவிக்கும் முகமாக செயற்பட்டு வருகின்றதற்கு உதாரணமாக குழுக்களிடையே சேமிப்பு பழக்கத்தை அறிமுகப்படுத்தியதுடன் வீட்டுத் தோட்டம் மற்றும் வன்முறைச் செயற்பாடுகளில் இருந்து பெண்கள் தப்பிப் பிழைத்தல் போன்ற பரிந்துரைகளை குழுக் கலந்துரையாடல் மூலம் தெளிவு படுத்தி வருகிறார்கள்.

அத்துடன் அசாதாரண சூழ்நிலைகளின் போதும் தற்போதுள்ள பொருளாதார நெருக்கடியின்போதும் பல உலர் உணவுப் பொதிகளை கிராமங்களிடையே வழங்கி உள்ளார்கள்.

இவ்வாறான சங்கத்தின் நான் உறுப்பினராக இருப்பதைக் கண்டு பெருமையடைகிறேன். மேலும் சங்கத்தின் கோரிக்கைகளை நிறைவேற்றும் நற் செயற்பாட்டாளர் எனும் பெயரில் கௌரவிக்கப்பட்டடேன். தொடர்ந்து இச் சங்கத்தின் செயற்பாடுகளுக்கு மதிப்புடன் அனைத்து செயற்பாடுகளுக்கும் தோள் கொடுப்பேன் என்பதனையும் சங்கத்தின் பெயரானது மேலும் சிறக்க வாழ்த்துக்கள் கூறிக் கொள்கின்றேன்.

நன்றி



இந்திரன் லக்மினி – குழத்தலைவி

தருமபுரம் - மேற்கு

தருமபுரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளிநொச்சி மாவட்டத்தில் பெண்கள் வாழ்வரிமைச் சங்கம் நான்கு பிரதேச பிரிவுகளிலும் உரிமைகள் சார்ந்து பல செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது. பெண்கள் வாழ்வுரிமைச் சங்கத்தில் 2019 ம் ஆண்டு காலப்பகுதியில் இருந்து நான் அங்கத்தவராக செயற்பட்டு வருகிறேன். நான் கணவரால் கைவிடப்பட்ட பெண்தலமைத்துவ குடும்பம் ஆகும். எனக்கு இரண்டு பிள்ளைகள் கல்வி கற்று வருகின்றனர். விவசாயம் மற்றும் கூலித்தொழில் மூலமாக எனது பிள்ளைகளை பராமரித்து வருகின்றேன். இந்த நிலையில் இந் நிறுவனத்தின் மூலம் கணவரால் கைவிடப்பட்டதால் எனக்குரிய சட்ட பரிந்துரைகளை வழங்கி சட்ட உதவி ஆணைக்குழு மூலம் வழக்கை பதிவு செய்து வழக்கு தொடரப்பட்டு வருகின்றது.

அத்துடன் பெண்கள் வாழ்வுரிமைச் சங்கத்தின் மூலம் கொவிற் காலப்பகுதி மற்றும் இயற்கை அனர்த்தம் போன்ற அசாதாரண சூழ்நிலைகளின் பொருட்டு பல நிவாரண செயற்பாடுகளை வழங்கி உள்ளார்கள்.

அது மட்டுமன்றி வீட்டுத் தோட்ட பயிர்ச்செய்கை மற்றும் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை போன்ற விவசாய செயற்பாடுகளை ஊக்குவித்து அதன் மூலம் வருமானங்களைப் பெற்று பொருளாதார கஸ்ரத்தை நிவர்த்தி செய்துள்ளனர்.

தொடர்ந்து தலைமைத்துவம் மற்றும் பால்நிலை சமத்துவம், மனித உரிமை பயிற்சிகள் , இயற்கை உரம் தயாரித்தல் , இயற்கை விவசாய செய்கை போன்ற பயிற்சிகளை வழங்கி சமுதாயத்தில் உரிமையுடன் செயற்படக் கூடிய ஆளுமை உள்ள பெண்ணாக மாற்றியுள்ளார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

நன்றி



நிரஞ்சன் நளிந்தினி – குழத்தலைவி

முகாவில்

இயக்கச்சி

**மகுடம்**

• கிளிநொச்சி மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்கள் வாழ்வுரிமைச்சங்கத்தில் குழு தலைவியாக கடந்த நான்கு வருடகாலமாய் இயங்கி வருகின்றேன். எமது கிராமத்து மக்களுக்கு பெண்கள் வாழ்வுரிமை சங்கத்தினால் கிடைக்கபெறும் பயன்கள் அளப்பெரியது.

அந்த வகையில் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கு உணவு பொதி வழங்குதல் பெண்தலமைத்துவ குடும்பங்களுக்கான வாழ்வாதாரத்தை ஊக்கப்படுத்தல் அவர்களின் விவசாயத்தை ஊக்குவித்தல் குடும்பங்களில் நடைபெறும் குடும்ப வன்முறைகளை இனங்கண்டு அதற்கான தீர்வுகளை ஏற்படுத்தி கொடுத்தல் அவர்களின் குடும்ப பிரச்சினையினை இணைப்பாளர் செல்வி வாசுகி வல்லிபுரம் அவர்கள் தீர்த்து வைத்துள்ளார்.

மது போதைக்கு அடிமையாகியவர்களை நேரடியாக அவர்களின் வீடுகளிற்கு சென்று அவர்களுடன் கலந்துரையாடி நல்வழி படுத்தியுள்ளனர்.

நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையின் போது Covid பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு சுகாதார பொதி மற்றும் உணவு திட்டங்களை பெண்கள் வாழ்வுரிமைச்சங்க நிறுவனம் வழங்கியுள்ளது. வெள்ளபெருக்கு ஏற்பட்ட நிலையில் உணவு பொதிகள் வீடுவீடாக சென்று தெரிவு செய்து வழங்கியுள்ளீர்கள்.

பெண்களுக்கான சட்ட கருத்துக்கள் பாடசாலை மாணவர்களுக்கான சுகாதார பொருட்கள் வழங்கப்பட்டது .குடும்பத்தில் ஏற்படும் குடும்ப வண்முறை தொடர்பாகவும் அவ் வீட்டு மாணவர்களுக்கான விழிப்புணர்வு கருத்துக்களும் வழங்கிவைக்கப்பட்டன. வீதி நாடக வடிவிலாக தெளிவுபடுத்தப்பட்டு இதற்கு எமது கிராம மக்களால் வரவேற்பும் வழங்கப்பட்டது. யுத்தத்தால் காயப்பட்ட காணாமல் ஆக்கப்பட்ட குடும்பங்களுக்கு உலர் உணவு பொதி வழங்கி வாழ்வாதாரத்தியையும் மேம்படுத்தி உள்ளனர்.

எனது கிராம மக்கள் சார்பாகவும் மாணவர்கள் சார்பாகவும் நன்றியினை தெரிவித்துகொள்கின்றேன்.



சிவலிங்கம் சுனிதா

பாரதிபுரம்

கரைச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org